## நடுநிலையான வழி

ஹஜ்ரத் அபூதர்தா (ர) அவர்கள் ஒரு பிரபலமான இறைவணக்கத்தில் ஈடுபாடுகொண்ட நபித்தோழராவார். பகலில் நோன்பு மேற்கொண்டு இரவெல்லாம் தொழுகையில் ஈடுபடுபவர். ஒருநாள் ஹஜ்ரத் சல்மான் ஃபார்ஸி (ர) அவர்கள் அவருடைய வீட்டிற்குச்சென்றார்கள். இறைவணக் கத்தில் ஈடுபாடு காரணமாக மிகவும் வலுவிழந்துவிட்டதாகக் கண்டு. உங் கள் இறைவன்பால் உங்களுக்குக் கடமை உண்டு, அதுபோன்று உங்கள் வீட்டார் விஷயத்திலும் உங்கள்மீது கடமை உண்டு. சிறந்தது என்னவெ னில் உங்கள் மீது கடமையான அனைவருடைய உரிமைகளையும் நீங்கள் நிறைவேற்றவேண்டும் என்று கூறினார்கள். இதனை இறைத்தூதர் ﷺ அவர்கள் கேட்ட போது சல்மான் ஃபார்ஸி (ர) அவர்கள் உண்மையையே கூறியுள்ளார் என்றார் கள்.

ஒருமுறை மூன்றுபேர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து மக்களிடம் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய வணக்க முறைகளைப்பற்றிக் கேட்ட றிந்தனர். பின்பு கூறினார்கள் முன் பின் அனைத்துமே மன்னிக்கப்பட் டுள்ள, குற்றமே இல்லாத இறைத்தூதர் ﷺ அவர்களுடைய இறை வணக்கத்தின் முறை இப்படியானால் நாம் செய்வது ஒன்றுமே இல்லை. ஒருவர் கூறினார் நான் இனி முழு இரவும் தொழுகையில் ஈடுபடுவேன், மற்றவர் நாள்தோறும் நோன்பு நோற்பேன் என்று முடிவு செய்தார், மூன்றாவது ஒருவர் கூறினார் நான் இனி பெண்களிடமிருந்து விலகியே இருப்பேன், திருமணம் செய்துகொள்ளவே மாட்டேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் வந்தபின் இவர்களுடைய நிலையைக் கேட்டு அவர்களிடம் கேட்டார்கள், இவ்வாறு நீங்கள் கூறினீர்களா? அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் உங்களில் அனைவரையும்விட அதிகமாக அல்லாஹ் வுக்குப் பயப்படுபவன், பயபக்தியுடையவன் ஆனால், நான் சில சமயங் களில் நோன்பு நோற்கிறேன், சில சமயங்களில், நோன்பு நோற்பதில்லை, நான் இரவுகளில் தொழுவதும் உண்டு தூங்குவதும் உண்டு, திருமணமும் செய்துகொள்கிறேன். என்னுடைய இந்த வாழ்க்கை முறையைவிட்டு விலகிச்செல்பவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் அல்ல (புக்ஹாரி)

### நேர்மை என்பது என்ன?

ஏற்றத்தாழ்வுகளிலிருந்து ஒதுங்கி நடுநிலையான வழியை மேற்கொள்வது தான் நடுநிலைமை எனப்படும். இந்த நடுநிலையான வழிதான் ஒரு மனி தனுக்கு நிறைவையும் முழுமையான முதிர்வையும் அளிக்கின்றது. மனிதர் கள் மீதான உரிமைகள் மற்றும்கடமைகளெல்லாம், அவை இறைவன் பால் செய்யவேண்டிய கடமைகளோ அல்லது மனிதர்களுக்கிடையிலான பரஸ்பர உரிமைகளோ அல்லது ஒருவன் தனக்குத்தானே நிறைவேற்றவேண்

www.uzaifalahi.com

டிய உரிமைகளோ ஒவ்வொன்றும் நடுநிலையான ஒருவரால் மட்டுமே முழுமையாக நிறைவேற்றப்படுகின்றன. இந்த பண்புகள் இல்லாத நிலையில் மனிதன் தன்னுடைய நடுநிலையான அணுகுமுறையை இழந்துவிடுகின்றான். ஒரு சாராரிடம் அதிக கவனம் செலுத்தினால் மற்றொரு சாராரின் உரிமைகள் பாழாக்கப்படுகின்றன. மனிதன் இயல்பான நடுநிலையான வழியைக் கடைபிடிக்காவிட்டால் நிச்சயம் பல இன்னல்களுக்கு ஆளாகிவிடுவான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**وَالْقَصْدَ الْقَصْدَ تَبْلُغُوْا** பொருள்: *நடுநிலையான வழியினை மேற்கொள்ளுங்கள், நடுநிலையான வழியினை மேற்கொள்ளுங்கள்,* இதனால் நீங்கள் உங்கள் இலட்சியங்களை அடையமுடியும் (புக்ஹாரி). நேர்மை மற்றும் நடுநிலையான வழி ஒவ்வொன்றிலும் கடைபிடிக்கப்படவேண்டும். வணக்க வழிபாடுகளில், செலவினங்களில், உண்ணும் உணவு ஆகியவற்றில், ஆடை உடுப்புகளில் மற்றும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِنَّ الدِّيْنَ يُسْرٌ، وَلَنْ يُشَادَّ الدِّيْنَ أَحَدٌ إِلاَّ غَلَبَهُ، فَسَدِّدُوْا وَقَارِبُوْا، وَأَبْشِرُوْا، وَاسْتَعِيْنُوْا بِالْغَدْوَةِ وَالرَّوْحَةِ وَشَيْءٍ مِّنَ الدُّلْجَةِ**

பொருள்: *மார்க்கம் மிகவும் எளியது, மார்க்க விஷயங்களில் கடினமான அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டால் அது ஆதிக்கம் செய்யும், ஆகவே அதனை நேரானதாக ஆக்குங்கள், நெருங்கி வாருங்கள், நற்செய்தியும் உற்சாகமும் கொள்ளுங்கள், காலையிலும் மாலையிலும் இரவின் முற்பகுதியிலும் முயன்று பாருங்கள்.* (புக்ஹாரி). இறைத்தூதர் ﷺ அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களுடைய வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களும் நடுநிலையான அணுகுமுறைக்கான சிறந்த உதாரணமாகும். அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கும் (சொற்பொழிவு) சமயத்திலும்கூட அது மிகவும் நீண்ட சொற்பொழிவாகவோ இருக்காது மிகவும் சுருக்கமானதாகவும் இல்லாது நடுநிலையானதாகவே இருக்கும். அவர்கள் சில நாட்களில் நோன்பு நோற்பார்கள் சில நாட்கள் விட்டும் விடுவார்கள், இரவுகளில் தொழுகையிலும் நிற்பார்கள் தூங்கவும் செய்வார்கள், இவ்வாறான நடுநிலையான அணுகுமுறை அதிகமாகவே காணப்படுகின்றது.

## செலவு செய்வதில் நடுநிலை

ஒரு மூஃமின் செலவு செய்யும்போது விண்விரயமும் செய்வதில்லை கஞ்சத்தனமும் கடைபிடிப்பதில்லை, மாறாக நடுநிலையான அணுகுமுறையை மேற்கொள்வான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَلَا تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَىٰ عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ ٱلْبَسْطِ فَتَقْعُدَ مَلُومًا مَّحْسُورًا ﴿٢٩﴾ **(الإسراء: 29)**

*பொருள்: உமது கையை கழுத்தோடு சேர்த்துக் கட்டிவிடாதீர், முற்றிலும் அதனை விரித்தும்விடாதீர், அப்படி செய்தால் பழிப்புக்குரியவராகவும் இயலாதவராகவும் ஆகிவிடுவீர்.*

*அல்லாஹ் தஆலா தன்னுடைய அடியார்கள் செலவு செய்வதில் நடுநிலை யான குணத்தையுடையவர்கள் என்று திருமறையில் குறிப்பிடுகின்றான்.*

**وَٱلَّذِينَ إِذَآ أَنفَقُواْ لَمۡ يُسۡرِفُواْ وَلَمۡ يَقۡتُرُواْ وَكَانَ بَيۡنَ ذَٰلِكَ قَوَامٗا ﴿٦٧﴾ (الفرقان: 67)**

பொருள்: *மேலும் அவர்கள் செலவு செய்யும்போது வீண்விரயமும் கஞ்சத் தனமும் செய்வதில்லை, மாறாக அவர்களுடைய செலவுகள் மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.* இறைத்தூதர் ﷺ அவர்கள் செலவு செய்வதில் நடுநிலையான சிக்கனமான முறையினை ஊக்குவிக்கும் வகையில் கூறுகிறார்கள்: **الإِقْتِصَادُ فِي النَّفَقَةِ نِصْفُ الْمَعِيْشَةِ** பொருள்: *செலவு செய்வதில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது வாழ்வாதாரத்தின் சரிபாதி யாகும் எனக்குறிப்பிட்டுள்ளார்கள்* (அல்க்ஹத்தீப்). செலவுகளில் நடுநிலை யான முறை மற்றும் சிக்கனம் பாதுகாப்பானதாகும், மனிதன் நொடிப்பி லிருந்து பாதுகாக்கப்படுவதுடன் மற்றவர்களுக்குமுன் கையேந்தும் இழிவி லிருந்தும் தப்பித்துக்கொள்கிறான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார் கள்: **مَا عَالَ مَنِ اقْتَصَدَ** பொருள்: *யார் நடுநிலையினைக் கடைபிடிக்கிறார் களோ அவர்கள் ஏழ்மைக்கு ஆளாகமாட்டார்* (அஹ்மது). இதற்கு மாறாக வீண்விரயம் செய்வது மற்றும் ஊதாரித்தனமாக செலவு செய்வது மனிதனை ஏழ்மைக்கு ஆளாக்கிவிடும் மற்றும் அவன் எல்லோரிடமும் கைநீட்டிப் பிச்சை கேட்கும் நிலைக்கு ஆளாகிவிடுவான்.

## உணவு ஆகியவற்றில் நடுநிலை

ஒரு முஃமின் உலகின் ஆசை மற்றும் பேராசைகொண்டவனாக இருப்ப தில்லை, அவன் எந்த அளவிற்குத்தேவையோ அதனையே எடுத்துக்கொள் வான். அவன் இவ்வுலகில் எது கிடைத்தாலும் வாரிக்கொள்வதற்காக அனுப்பப்படவில்லை, அவன் உணவு விஷயத்தில் துள்ளி விழுவதில்லை. ஆகவேதான், இறைத்தூதர் ﷺ அவர்கள் உணவு விஷயத்தில் வீண்விரயம் மற்றும் ஊதாரித்தனத்திலிருந்து தடுத்துள்ளார்கள்:

**مَا مَلأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِّنْ بَطْنٍ، حَسْبُ الآدَمِيِّ، لُقَيْمَاتٌ يُقِمْنَ صُلْبَهُ فَإِنْ غَلَبَتِ الآدَمِيَّ نَفسُهُ، فَثُلُثٌ لِلطَّعَامِ، وَثُلُثٌ لِلشَّرَابِ، وَثُلُثٌ لِلنَّفَسِ.**

பொருள்: *மனிதன் தன் வயிற்றைவிட எந்த ஒரு கொள்கலனையும் தீமை யைக் கொண்டு நிரப்புவதில்லை. மனிதனுக்குத் தன் முதுகுத்தண்டை*



www.uzaifalahi.com

*நிலையாக வைத்துக்கொள்ள சில கைப்பிடி பருக்கைகளே போதுமானவை. ஆனால், ஒருவன் அதிகம் சாப்பிட ஆசைப்பட்டால் (விரும்பினால்), தன் வயிற்றின் மூன்றில் ஒரு பாகம் சாப்பாட்டிற்காகவும், மூன்றில் ஒரு பாகம் தண்ணீர் பருகுவதற்காகவும் மற்றும் மூன்றில் ஒரு பாகம் மூச்சுவிடுவதற்கும் (காற்றிற்கும் காலியாக) விடவேண்டும்.* (திர்மிதி, இப்னு மாஜா).

## ஆடை உடுப்புகளில் நடுநிலை

ஒரு மு.்மின் தான் பயன்படுத்தும் ஆடைகளிலும் நடுநிலையான முறையைக் கடைபிடிக்கிறான், உடைகள் அணிவதிலும் வீண் செலவு செய்யக்கூடாது, மற்றவர்களுக்குமுன் பெருமைகொண்டு காட்டிக்கொள்வதற்காகவும் செய்யக்கூடாது,இறைத்தூதர் ﷺ அவர்கள் இதிலிருந்து தடுத்துள்ளார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

مَنْ لَبِسَ ثَوْبَ شُهْرَةٍ أَلْبَسَهُ اللهُ يَوْمَ الْقِيَامَةِ ثَوْباً مِثْلَهُ ثُمَّ تُلَهَّبُ فِيْ النَّارِ

பொருள்: *யார் பாராட்டு பெறும் வகையிலான உடைகளை அணிவார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மறுமைநாளில் அதே வகையிலான ஆடைகளை அணிவிப்பான், பின்பு அவற்றில் தீமூட்டப்படும்* (அபூ தாவூது, இப்னு மாஜா). இதன் பொருள் முஸ்லிமானவர்கள் பழைய, கிழிந்த கந்தலான துணிகளையே அணியவேண்டும் என்று எண்ணிவிடவேண்டாம். ஒரு அறிஞர் ஒருவருடைய ஆடை அணியும் முறையினைப்பற்றிக் கூறியுள்ளார், ஒருவர் உடுத்தும் ஆடை எப்படி இருக்கவேண்டும் என்றால் அறிவற்றவர்கள் அதனைக்கண்டு உங்களை இழிவானவராக நினைத்துவிடும் வகையில் மோசமானதாகவும் இருக்கக்கூடாது, அறிவாளிகள் அதனைக் கண்டு குறைகூறும் வகையில் கவர்ச்சியானதாகவும் இருக்கக்கூடாது.

## கடின உழைப்பு மற்றும் ஓய்வு ஆகியவற்றில் நடுநிலை

ஒரு முஸ்லிம் நடுநிலையானவராக இருப்பார். ஒரு வேலையில் ஈடுபட்டால் அதனையே தொடர்ந்து செய்துகொண்டு சாப்பாடு மற்றும் ஓய்வு பற்றியும் பொருட்படுத்தாமல் இறுதியில் நோய்வாய்ப்பட்டுவிடும் அளவிற்கு ஆகிவிடக்கூடாது. ஒரு பணியில் மும்முரமாக ஈடுபடலாம் ஆனால், நடுநிலையான வகையில். *ஒரு மனிதனுடைய உடல் பலம் மற்றும் வலிமை அல்லாஹ்வின் அமானிதமாகும், ஒருவருடைய உடல் சம்பந்தமான உரிமைகளும் அவர்மீது உள்ளன.* இவ்வகையான மட்டுமீறிய நிலைப்பாட்டின் விளைவாக ஒருவர் களைத்து விடுவாரேயானால் அதே அளவு ஓய்வும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது இயல்பான ஒன்றாகும். இதேபோன்று ஒருவர் ஓய்வு என்ற பெயரில் ஓய்வெடுத்தவாறே நாட்களைக் கழிக்கின்றார். வாழ்க்கை என்பது உழைப்பும் முயற்சியும் கொண்டதாகும், மேலும் உழைப்பு என்பது தலைதெறிக்க ஓடுவது என்பது பொருளல்ல, இதுவரை எவரும் ஒரு மலை உச்சியை வேகமாக

www.uzarabahi.com

ஓடியே எட்டியது கிடையாது, இவ்வாறு செய்பவர்கள் இடையிலேயே களைத்து உட்கார்ந்துவிடுவார்கள். இஸ்லாத்தின் அணுகுமுறையானது கடும் முயற்சியும் மேற்கொள்ளப்படவேண்டும் அத்துடன் தேவையான அளவு ஓய்வும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகும். இவ்வகையில் மீண்டும் புத்துணர்ச்சிபெற்று சிறந்த முறையில் ஒரு மனிதன் தன்னுடைய பணியில் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்பதாகும்.

## பேசுவதிலும் நடுநிலை

தேவையின்றி பேசுவது ஒரு குறைபாடாகும், ஓயாமால் பேசிக்கொண்டிருப்பதே சிலருடைய பழக்கமாக இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் இதனைத் தடுத்துள்ளார்கள், கூறுகிறார்கள்:

**إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ وَأَقْرَبِكُمْ مِنِّيْ مَجْلِساً يَوْمَ الْقِيَامَةِ أَحاسِنَكُمْ أَخْلاَقاً، وَإِنَّ أَبْغَضَكُمْ إِلَيَّ وَأَبْعَدَكُمْ مِنِّيْ مَجْلِساً يَوْمَ الْقِيَامَةِ الثَّرْثَارُوْنَ وَالْمُتَشَدِّقُوْنَ وَالْمُتَفَيْهِقُوْنَ، قَالُوْا يَا رَسُوْلَ اللهِ، قَدْ عَلِمْنَا الثَّرْثَارُوْنَ وَالْمُتَشَدِّقُوْنَ فَمَا الْمُتَفَيْهِقُوْنَ؟ قَالَ: الْمُتَكَبِّرُوْنَ.**

பொருள்: *எனக்கு மிகப் பிரியமானவர்களும் மறுமைநாளில் எனக்கு அருகிலேயே என்னுடனே இருப்பவர்கள் உங்களில் உயர்ந்த குணங்களையுடையவர்களே. நான் மிகவும் வெறுக்கக்கூடியவர்களும் மறுமைநாளில் என்னிடமிருந்து மிகத் தூரமாகவே இருப்பவர்கள் யாரெனில், தேவையின்றி ஓயாது பேசிக்கொண்டிருப்பவர்கள், தன்னுடைய உரையாடல்களில் மிக அதிகமாகவே கடினமான (அனைவரும் விளங்கிக்கொள்ள முடியாத) சொற்களைப்பயன்படுத்துபவர் மற்றும் (முதஃபய்ஹிஃகீன்கள் என்று கூற, நபித்தோழர்கள் அவர்கள் யார் என்று கேட்டபோது கூறினார்கள்) கர்வமுடையவர்கள்.* பேச்சுக்களில் ஒருவர் நடுநிலையான அணுகுமுறையை மேற்கொண்டால் தவறுகள் ஏற்படுவது குறையும். ஏனெனில், அனைவரும் அறிந்த ஒன்று, யார் எவ்வளவு அதிகமாகப் பேசுவாரோ அதே அளவு தவறுகளும் ஏற்பட வாய்ப்புண்டு. ஒரு மூஃமினுடைய குணம் யாதெனில் அமைதியைக் கடைபிடிப்பதால் பலன் ஏற்படுமானால் அவர் அமைதியாகவே இருப்பார். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: **مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيَقُلْ خَيْراً أَوْ لِيَصْمُتْ** **(متفق عليه)** பொருள்: *யார் அல்லாஹ் மற்றும் மறுமைநாள் மீது ஈமான் கொண்டுள்ளார்களோ அவர்கள் பேசினால் நல்லதையே பேசவேண்டும் அல்லது பேசாமலேயே அமைதியாய் இருக்கவேண்டும்.*

## நடுநிலையான அணுகுமுறையின் சிறப்பு

மிதமான நடுநிலையான அணுகுமுறை மனிதனை கண்ணியமிக்கவனாகவும் விரும்பப்படுபவனாகவும் அல்லாஹ்வுக்குப் பிரியமானவனாகவும் ஆக்கிவிடுகின்றது.

www.uzhaiahi.com

★ **நடுநிலையான அணுகுமுறை நபிமார்களுடைய பண்பாகும்**

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

إِنَّ الْهَدْيَ الصَّالِحَ، والسَّمْتَ الصَّالِحَ، وَالإقْتِصَادَ جُزْءٌ مِّنْ خَمْسَةٍ وَّعِشْرِيْنَ جُزْءًا مِّنَ النُّبُوَّةِ

*பொருள்: பரிசுத்தமான வழிகாட்டுதல், சீரான வழிநடத்தல் மற்றும் நடுநிலைமை நபித்துவப்பண்புகளின் இருபத்தைந்தாம் பாகமாகும்.*

★ **மிதமான நடுநிலையான அணுகுமுறை ஏற்றத்தாழ்விலிருந்து பாதுகாக்கும்**

*மிதமான நடுநிலையான அணுகுமுறை ஒருவரை ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பாதுகாக்கும் மற்றும் முழுமையான சமச்சீரான நிலையை உண்டாக்கும்.*

★ **மிதமான நடுநிலையான அணுகுமுறை மறுமைநாளில் ஒருவருடைய கேள்வி கணக்கின்போது அதனை எளிதாக்குவதற்குக் காரணமாக அமையும்**

*ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

وَأَمَّا الَّذِيْنَ اقْتَصَدُوا، فَأولئِك يُحَاسَبُوْنَ حِسَاباً يَّسِيْراً *பொருள்: எவர் மிதமான நடுநிலையான அணுகுமுறையைக் கடைபிடிக்கின்றார்களோ மறுமை நாளில் அவர்கள் எளிதாகவே கணக்குக் கேட்கப்படுவார்கள்.*

* * *

www.uzalifalahi.com